## பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி - 2013

பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 05 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பதவிநிலைக் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பதவிநிலைக் கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்கள் பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாட்டின் கீழ் நிலையான சொத்துக்களின் கையேற்பாக ரூபா 34,630,676 தொகையும் அபிவிருத்தி செலவினமாக ரூபா

137,309,239 தொகையும் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், கல்லூரியின் பொதுப் பேரேட்டின் படி நிலையான சொத்துக் கையேற்கப்படுவதற்காக ஆண்டின் போது ரூபா 45,767,415 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அபிவிருத்திச் செலவினத்திற்காக ரூபா 126,042,304 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிலையான சொத்துக் கையேற்கப்படுவதற்குச் செலவிடப்பட்ட ரூபா 11,136,739 குறைவாகவும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 11,266,935 தொகை அதிகமாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவு | பாதீடு தயாரிக்கப்பட்டு குறித்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டின் பாதீடு 2013 பெப்ரவரி 23 ஆந் திகதியன்றே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.2.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதிடப்பட்ட ஐந்தொகை, பாதிடப்பட்ட வருமானச் செலவினக் கூற்று மற்றும் பாதிடப்பட்ட காசோட்டக் கூற்று என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளிலிருந்து உருவாகிய நிதி விளைவுகள் ரூபா 1,115,201

பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,410,036 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,294,835 தொகையான அதிகரிப்பு காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டில் அரசாங்க மானியம் அதிகரித்தமை முன்னேற்றத்திற்கான முக்கிய காரணமாகியிருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 5,294,835 தொகையான பின்னடைவிற்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்திற்குச் சமனான ரூபா 13,955,952 தொகையான செலவினம் அதிகரிக்கப்படுவதற்கு நேரொத்த வருமானம் ரூபா 23,954,668 தொகை அதாவது 17 சதவீதத்தால் அதிகரித்தமை காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவிநிலைக் கல்லூரியால் நடாத்திவருகின்ற பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் முறையே 102 மாணவர்கள் வீதம் பங்குபற்றியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் படி இவ்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது பயிற்சி பெற்ற ஒரு பட்டதாரிக்கான கிரயம் முறையே ரூபா 1,626,436 தொகையும் ரூபா 1,422,321 தொகையுமாக ஏற்கப்பட்டிருந்தது.

(ஆ) பதவிநிலைக் கல்லூரியால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்காக முப்படையால் சம்பளம் பெறும் சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் பதவிநிலைக் கல்லூரியின் நடவடிக்கைகளுக்குரிய எரிபொருள் செலவினம் மற்றும் பட்டப் பயிலுனர்களின் வெளிநாடு செல்வதற்காக உரிய செலவினம் அவ் இராணுவத்தினரால் ஏற்கப்பட்டிருந்தது. அத்தகைய செலவினம் தொடர்பான விபரம் பராமரிக்கப்பட்டிராமையால் பதவிநிலைக் கல்லூரியின் செயலாற்றல் சரியாக மதிப்பிடப்பட முடியாதிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

2013 – 2016 கூட்டிணைந்த திட்டமும் 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டமும் நடப்பாண்டிற்குரிய பாதீட்டுடன் ஒப்பிடப்படுகையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டிணைந்த திட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்காக பாதீட்டு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இதன் படி கூட்டிணைந்த திட்டம் திருத்தப்பட்டிராததுடன் இவ்வாறே பாதீட்டின் பின்னர் திருத்தப்பட்ட போதிலும் இதற்கு இணங்கும் வகையில் முதலாவது செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகள் எய்தப்படுவது தொடர்பாக ஆய்வு செய்யப்படும் வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவு வழிகாட்டியிலிருந்து அகற்றப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட தேசிய போட்டி மனுக் கோரலின் போது வழங்குனர்களுக்கு மனு வழங்கப்படுவதற்காக 21 நாட்கள் ஆகக் குறைந்த காலம் வழங்கப்பட்டிராமை.

(ஆ) 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.12.3(ஆ) பிரிவிற்கு இணங்காத வகையில் இரண்டாம் முறை மனுக் கோரலின் போது முன்னர் பயன்படுத்தப்பட்ட மனுக் கோரல் பதிவேடு பயன்படுத்தப்பட்டமை.

(இ) மனுப் பொறுப்பேற்கப்பட்ட நாள் முதல் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்படும் வரையான அடிப்படை நடவடிக்கைகளுக்காக 06 மாதங்களான நீண்ட காலம் கடந்திருந்தமை.

(ஈ) வழங்குனருடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிராமையால் வழங்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டவாறு பொருட்களை வழங்கியிராத வழங்குனர்களிடமிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு முடியாதமை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பதவிநிலைக் கல்லூரியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) கொள்வனவு